# யாழ். பல்கலைக்கழகத்திற்கு இவ்வருடம் ஒதுக்கப்பட்ட நிதி வழமையைவிட குறைவே

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இவ்வாண்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கிய நிதி மிகக்குறைவே எனப்பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. கடந்த ஆண்டு நாட்டில் உள்ள சகல பல்கலைக்கழகங்களுக்கும் ஒதுக்கப்பட்ட நிதியைவிட இவ்வாண்டு யாழ் பல்கலைக்கழகத்துக்கு மட்டுமே குறைவாக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் யாழ் பல்கலைக்கழகத்தில் உள்ள ஒவ்வோரு பீடங்களும் 1990 - 1991 கல்வியாண்டு செயற்பாடுகளை முழுமையாக மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. இதேவேளை தென்பகுதி பல்கலைக்கழகங்களுக்கு போதிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நிலை யாழ் பல்கலைக்கழகம் புறக்கணிக்கப்படுவதனை துலாம்பரமாகக் காட்டுவதாகக் கூறப்படுகிறது. 01

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 5 00

# முரசொலி

முரசு 03 ஒலி 289 பிரசோற்பத்தி ஐப்பசி 12 (29-10-1991) செவ்வாய்

★ பி. பி. ஸி. நேற்றிரவு வெளியிட்ட தகவல்

# புலிகளின் வாயுவேகத் தாக்குதல் ராணுவத்திற்குப் பெரும் தலைவலி

கிழக்கில் விடுதலைப்புலிகள் தொடர்ந்து நடத்திவரும் அதிரடித் தாக்குதல்கள் ஸ்ரீலங்கா இராணுவத்துக்குப் பெரும் தலைவலியாக இருந்து வருகின்றது என்று நேற்றிரவு பி. பி. ஸி. தனது செய்திக் கண்ணோட்ட வேளையின் போது தெரிவித்தது

விடுதலைப் 'புலிகள் ஸ்ரீலங்கா படையினருக்கு எதிராக மேற்கொண்டுவரும் தற்போதைய போராட்ட உத்தி பற்றியே இதில் குறிப்பிடப்பட்டது.

இராணுவச் சோதனைச் சாவடிகளில் தமிழ் மக்கள் அவமானப்படும் வேதனை நிலை உள்ளது என்றும் பி. பி ஸியின் கொழும்புச்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## முல்லை. மாவட்டத்தின் வடகிழக்கே வங். விரிகுடாவில் தாழமுக்கம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் வடகிழக்கே வங்காள விரிகுடாவின் தென்மேற்குத் திசையில் தாழமுக்கம் ஏற்பட்டுள்ளதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

இது பற்றி வானிலை அவதான நிலையம் தகவல் தருகையில் கடும் மழை தொடர்ந்தும் இருக்கும் என்றும் கூறியுள்ளது.

இதற்கிடையில் தற்போது குடாநாட்டின் பல பாகங்களிலும் பெய்துவரும் தொடர்ச்சியான பெருமழையால் அனர்த்தங்கள் ஏற்பட்டு வருவதாக நேற்றிரவு

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கடல் கொந்தளிப்பால் . கப்பல்கள் வரவில்லை .

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட தாழ அமுக்கத்தாலும் கடல் கொந்தளிப்பினாலும் கொழும்பிலிருந்து வடக்கே கப்பல்களை அனுப்ப முடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று வடபகுதிக்கு வர வேண்டிய இரு கப்பல்கள் இதன் காரணமாக வரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (06)

## கப்பலில் இன்று தபால் செல்லும்

யாழ் குடாநாட்டுத் தபாலகங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட, வெளிமாவட்டங்களுக்

—04ஆம் பக்கம் பார்க்க

## அன்னமலையில்சிப்பாய்கள் இருவருக்குக் காயம்

அம்பாறையில் அன்னமலை என்ற பகுதியிலிருந்த இராணுவ முகாம் அகற்றப்பட்டுள்ளது என்றும் 12 ஆம் கொலனிப் பகுதியில் புதிய முகாம் ஒன்று அமைக்கப்பட்டது என்றும் அறியவந்துள்ளது.

12 ஆம் கொலனி முகாம்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ஆரையம்பதிபெரியபோரதீவு அப்பாவி மக்கள் மீது சூடு!

நேற்று முன்தினம் பெரிய போரதீவு இராணுவ முகாமிலிருந்து அம்பிலாந்துறை முகாம் நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் கூட்டமாக நின்ற மக்கள் மீது சரமாரியாகச் சுட்டதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## உணவுப் பொருள்; பகிர்வு நிலை இப்போது அவசியமாகின்றது

**- யாழ் அரச அதிபர்**

பூநகரி - சங்குப்பிட்டிப் பாதை கடந்த இரு வாரமாகத் தடைப்பட்டுள்ளதாலும் கப்பல்கள் மூலம் பொருள்களைக் கொண்டுவருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாலும் யாழ் மாவட்டதில் உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை உருவாகி வருகிறது என்று யாழ் அரசாங்க அதிபர் கே மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

பொலநறுவ - மட்டக்களப்பு எல்லைப்புறச் சம்பவம்

## புலிகள் மகளிரணி ஆயுதங்களையும் கைப்பற்றியது

பொலநறுவ-மட்டக்களப்பு எல்லைப் பிரதேசத்தில் உள்ள வெலிகந்தையில் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா இராணுவ அணி மீது மின்னல் வேகத் தாக்குதலை கனகச்சிதமாக நடத்தி பதினான்கு இராணுவத்தினரைக் கொன்று குவித்து ஆயுதங்களையும் கைப்பற்றியவர்கள் விடுதலைப் புலிகளின் மகளிர் படைப் பிரிவேஎன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் முதல் தடவையாக மகளிர் பிரிவினர் இத் தாக்குதலை அவர்கள் அசாதாரணத் துணிச்சலுடனும், அமானுஷ்ய ஆற்றலுடனும், அதியுயர் மதிநுட்பத்துடனும்

— 04 ஆம் பக்கம் பார்க்க

# தனி முஸ்லிம் இராணுவம் தேவை என்கிறார் அபூபக்கர்

விடுதலைப் புலிகளை அடக்கி ஒடுக்க 'வதுப்' எனப் பெயரிடப்பட்ட தனி முஸ்லிம் இராணுவப் பிரிவொன்று ஸ்ரீலங்கா இராணுவப் படையுடன் இணைக்கப்பட வேண்டுமென முஸ்லிம் காங்கிரஸின் வன்னிமாவட்ட உறுப்பினரான எம்.எச்.எம். அபூபக்கர் பாராளுமன்றத்தில் கேட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றிய இவர் இந்த நோக்கத்திற்காக விடுதலைப்புலிகளுக்கு எதிரான தமிழ் இளைஞர்களையும் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளலாமெனவும் அரசுக்கு ஆலோசனை தெரிவித்ததாகக் கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

# குடாநாட்டில் கடும் மழை

## தாழ்ந்த பகுதிகளில் வெள்ள அபாயம்

குடாநாட்டில் பெய்துவரும் கடும்பருவ மழையினால் தாழ்ந்த பகுதிகளில் வெள்ள அபாயம் தோன்றியுள்ளதாக எமது நிருபர்கள் அறிவிக்கிறார்கள்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணிக்கு ஆரம்பமான கடும்மழை குடாநாட்டின் பல பகுதிகளிலும் கடந்த 36 மணி நேரத்திற்கும் மேலாகத் தொடர்ந்து பெய்து வருகின்றது

இந்த தொடர் மழை காரணமாக பல தாழ்ந்த பகுதிகள் வெள்ள நீரினால் நிரம்பியுள்ளன. யாழ்-கண்டிவீதியில் கொடிகாமத்தின் பல இடங்களில் வெள்ளம் தேங்கியுள்ளது. சாவகச்சேரியிலும் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள வீதி முழுமையாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

மழை தொடர்ந்து பெய்து வருவதனால் வலிகாமம், தீவுப்பகுதி, வடமராட்சி கிழக்குப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து தற்காலிக இருப்பிடங்களில் தங்கியுள்ளோர் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் எமது நிருபர்கள் அறிவிக்கிறார்கள்.

# புனித அந்தோனியாரின் தாடை துப்பாக்கி முனையில் கொள்ளை

பதுளையிலுள்ள புனித அந்தோனியார் தேவாலயத்தில் இருந்து 700 வருடங்கள் பழமை வாய்ந்த புனித அந்தோனியாரின் தாடையை முகமூடி அணிந்த கொள்ளையர்கள் துப்பாக்கி முனையில் எடுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தால் பல லட்சக்கணக்கான இத்தாலிய கத்தோலிக்கர்கள் ஆத்திரம் கொண்டுள்ளனர்.

இவர்கள் இத் தேவாலயத்தின் முன்பாகக் கூடி இப் புனித சின்னம் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்தனை செய்கின்றனர். (08)

# 'சார்க்கில்' பங்குபற்றுமாறு இந்தியப்பிரதமருக்கு விசேட அழைப்பு

சார்க் மகாநாட்டில் பங்குபற்றுமாறு இந்தியப் பிரதமர் நரசிம்மராவை ஜனாதிபதி பிரேமதாஸ கடிதமூலம் விசேடமாக அழைப்பு விடுத்துள்ளார்.

'கொழும்பில் நடைபெறவுள்ள 6-வது சார்க் உச்சி மகாநாட்டில் முழுமையான பங்களிப்பு அவசியம் — ஆரம்பம் முதல் இறுதிவரை தாங்கள் இவ் மகாநாட்டில் முழுமையாகக் கலந்து கொள்ள வேண்டும்' என ஜனாதிபதியின் விசேட கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.'

இந்த மகாநாட்டை இந்தியப்பிரதமர் பகிஷ்கரிக்கலாமென அரசியல் அரங்கில் பலமான எதிர்பார்ப்பு ஒன்று உள்ளமை தெரிந்ததே.

# தேயிலை காலைவாரியது கெக்கரிக்காய் கைகொடுக்கிறது

இலங்கை பல நாடுகளுக்கும் கெக்கரிக்காயை ஏற்றுமதி செய்யஆரம்பித்துள்ளது.

கடந்த இரண்டு வருடத்தில் ஓரளவு பதப்படுத்தப்பட்ட கெக்கரிக்காய்க்கு நல்ல உலகச் சந்தை ஏற்றுமதி வாய்ப்பு கிடைத்துள்ளது

கடந்த வருடம் 6630 மெற்றொன் கெக்கரிக்காய் ஏற்றுமதி செய்யப்பட்டது இதன் மூலம் 22 கோடி 60 லட்சம் ரூபா வெளிநாட்டு வருமானம் கிடைத்துள்ளது.

தேயிலைக்கான உலகச் சந்தை வாய்ப்பு பாதிக்கப்பட்டுள்ளதினால் வெளிநாட்டு வருமானத்துக்கு இலங்கை தற்பொழுது கெக்கரிககாயையே நம்பியிருக்க வேண்டியுள்ளதாம்.

# பயிலுநர்க்கு 100ரூபா அதிகரிப்பு ஜனவரி முதல் கிடைக்கும்

சாதாரண பயிலுநர் ஆசிரியர்களுக்கான 100 ரூபா விசேட அலவன்ஸ் அதிகரிப்பு ஜனவரி மாதம் முதல் வழங்கப்படவுள்ளது.

நாடு முழுவதிலும் சேவை புரியும் 35 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்களுக்கும் விசேட அதிகரிப்புக் கிடைக்கும்.

இந்த அதிகரிக்கப்பட்ட 100 ரூபா அலவுன்ஸ் அவர்களினது பெயரில் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பிலிடப்படும் இதற்காக பயிலுநர் ஆசிரியர்கள் தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்புக கணக்கொன்றை ஆரம்பிக்க வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளனர்

## 350 பயிலுநர் சேர்க்கப்படுவர்

கொழும்பு- ஊருகொட வத்தையில் இயங்கிவரும் தொழில்திணைக்கள ஆற்றல் விருத்தி நிலையம் புதிதாக 350 பயிலுநர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

18 வயதுக்கு மேற்பட்ட க. பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்தோர் இதற்கு விண்ணப்பிக்கலாம். மேலதிக விவரம் 18 ஆம் திகதி வெளிவந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## கிராமம் தோறும் பாவனையாளர் குழு

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் "பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்கள்" அமைக்கப்படவுள்ளன. இக் குழுக்கள் அமைப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் உதவி அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார். (18)

## "புலிக் கொடிபறக்குது ... பார்"

இரத்தம் தோய்ந்த புலிக்கொடியால்
இலங்குது பாரெங்கள் திருநாடு!
மரணத்தை வென்ற மாவீரர் ...........
மாண்பினைக் காட்டும் புலிக்கொடி பார் ...........!

எழுந்திடு தமிழா ...... எழுந்திடடா............
ஏறிடும் புலிக்கொடி தலைவணங்கு!
வளமிகு ஈழத் தமிழ்நாட்டில்
வெற்றிக் கொடியாம் ......... புலிக்கொடி பார்!

மஞ்சள் சிகப்பு கறுப்பென்ற
மனங்கவர் நிறங்களைக் கொண்டெங்கள்
கொஞ்சும் தமிழின் தாய்பெற்ற .........
கொடியாம் ...... புலிக்கொடி ...... பறக்குது பார்!

இயலும் ...... இசையும்...... நாடகமும்
இலங்கும் எங்கள் முத்தமிழின்
உயர்வை நெஞ்சில் கொண்டங்கே
உயரப் பறக்குது ...... புலிக்கொடி பார்!

தலைவர் பிரபா கரன்பெற்ற
தளிர்கள் ... பலரின் உயிராலே
நிலையாய் நிமிர்ந்தே பறக்கின்ற .........
நமது புலிக்கொடி அழகைப்பார்!

திருமலை ......... மன்னார் ......... மட்டுநகர்
தேன் தமிழ் வன்னி ......... அம்பாறை
யாழ்ப்பாணத்தின் நிலமெங்கும்
புலிக்கொடி பறக்கும் எழிலைப் பார்!

கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்

(மாவீரர் தினத்தில் விடுதலைப்புலிகளின் தேசியக் கொடி ஏற்றிக்கௌரவிக்கப்படவுள்ளதால் இச்சிறுப் புக்கவிதை இங்கு பிரசுரமாகிறது)

சோதிடம்

தீராத கடன் தொல்லை, தொழில் நட்டம், கல்விக் குழப்பம், விவாகம் நடவாமை போன்ற கவலைகள் நீங்கி அதிர்ஷ்டத்துடன் வாழ சாதகத்துடன் நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெற உத்தரவாதம் ஸ்ரீ சக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம் (ஸ்ரீ வீரமாகாளி கோவிலடி) நல்லூர்

10038

பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்

கலை/ வர்த்தகம்/ முகாமைத்துவம்/ இராமநாதன் நுண்கலைப்பிரிவு

கல்வி ஆண்டு 1990 /91

மேற்படி பயிற்சி நெறிகளிலுள்ள 1-ம், 2-ம், 3-ம், 4ம் வருட மாணவர்களுக்கான புதிய கல்வி ஆண்டு 04. 11. 91 -ல் ஆரம்பமாகும்.

பதிவாளர்
பரீட்சைக் கிளை,
யாழ் பல்கலைக்கழகம்,
25. 10. 91. 10044

அறிவித்தல்

ADMISSION - 1992

ST. JOHN 'S COLLEGE, JAFFNA

பிற்போடப்பட்ட ஆண்டு 6, ஆண்டு 10 பரீட்சைகள் நவம்பர் மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை (1 - 11 - 1991) காலை 9. 00 மணிக்கு நடைபெறும்.

அதிபர்

10045

அறிவித்தல்

ADMISSION - 1992

CHUNDIKULI GIRLS' COLLEGE JAFFNA

பிற்போடப்பட்ட ஆண்டு 1, ஆண்டு 6, ஆண்டு 10 பரீட்சைகள் நவம்பர் மாதம் இரண்டாந்திகதி சனிக்கிழமை (2. 11. 91) காலை 9. 00 மணிக்கு நடைபெறும்.

அதிபர்
10046

# அதிகளவு பிறநாட்டு அகதிகள் அமெரிக்காவுக்குள் புக அனுமதி

அமெரிக்காவிற்கு வரும் அகதிகளின் தொகையை வருடம்தோறும் மேலும் பதினோராயிர மாக அதிகரிக்க ஜனாதிபதி புஷ் சம்மதம் தெரிவித்துள்ளார்.

சென்ற ஆண்டில் ஒரு லட்சத்து முப்பத்தோராயிரம் அகதிகள் அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால் 1991 அக்டோபர் முதல் 1992 அக்டோபர் வரை 1,42000 அகதிகள் அனுமதிக்கப்பட்டனர்.

சோவியத் ரஷ்யாவின் அகதிகள் அதிகம் வர அனுமதிக்கப்படுவார்கள்

ஆபிரிக்கா, கிழக்கு ஐரோப்பா, கிழக்கு ஆசியா, தென்னாசியப் பகுதி அகதிகளே இங்கு அதிகம் உள்ளனர்.

## 3 வருட ஒப்பந்தத்தில் 300 இந்திய ஆசிரியர்கள்

இந்தியாவிலிருந்து 300 கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் விரைவில் இங்கு வரவழைக்கப்படவுள்ளதாக அமைச்சர் தொண்டமான் நேற்று முன்தினம் மாத்தளையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்.

இந்த ஆசிரியர்கள் மூன்று வருட ஒப்பந்தத்தில் இங்கு வரவழைக்கப்படவுள்ளனர்.

மலையகப் பகுதிகளில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் இந்த இந்திய ஆசிரியர்கள் பணிபுரிவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவிலிருந்து கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் இங்கு வரவழைக்கப்படவுள்ளமை பற்றி முரசொலி ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## பாக். அணியின் இந்திய விஜயம் சிவசேனை எச்சரிக்கையால் ரத்து

பாகிஸ்தான் கிரிக்கட் குழுவின் இந்திய விஜயம் கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணி-இந்திய அணியுடன் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் அடுத்த வாரம் முதல் ஒருநாள் போட்டிகளில் ஆட முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது.

இப்போட்டிகள் தாக்கப்படுமென இந்து தீவிரவாத இயக்கமான சிவசேனை அமைப்பு எச்சரித்ததைத் தொடர்ந்தே பாக்-அணி தனது இந்திய விஜயத்தை ரத்து செய்துள்ளது.

## செஞ்சிலுவை விதை வழங்கும்

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுச் செஞ்சிலுவைச் சங்க வட்டுக்கோட்டைக் கிளையினர் தமது பிரிவுக்குட்பட்ட கஷ்டப்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக விதைகளை வழங்கவுள்ளனர்.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள உற்பத்திக் குழுக்களின் சிபார்சுக்கிணங்க இந்த விதைகள் விநியோகிக்கப்படும் (18)

## விமானம் விழுந்து நொருங்கியது விமானி குதித்து உயிர் தப்பினார்

பாகிஸ்தான் விமானப் படைக்குச் சொந்தமான எவ்.16 ரக போர் விமானமொன்று இஸ்லாமாபாத்திலிருந்து 50 கிலோமீற்றர் தொலைவில் விபத்துக்குள்ளாகி வீழ்ந்து நொருங்கி விட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

விபத்துக்குள்ளான காரணம் உடனடியாகத் தெரிவிக்கப்படவில்லை. விமானம் முற்றாகச் சேதமடைந்து விட்டபோதிலும் விமானி வெளியே குதித்து உயிர் பிழைத்து விட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன

## வயிற்றோட்ட அபாயம்

திவசத்தில் இடம் பெற்று வரும் இராணுவநடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்த அகதிகள் தங்கியுள்ள முகாம்களில் வயிற்றோட்ட நோய்கள் வரக்கூடிய சாத்தியக் கூறுகள் தோன்றுவதாக தெரிவிக்கப்படுகின்றது

## ஆபிரிக்க ஏழைகளுக்கு மிருகங்களுக்கான பால்மா

ஆபிரிக்காவில் பட்டினியால் வாடும் ஏழைகளுக்கு கப்பல் நிறுவனமொன்று மிருகங்களுக்கு வழங்கப்படும் பால்மா உணவுகளை அனுப்பி வைத்துள்ளதாம்.

இது தொடர்பாக குறித்த கப்பற் கம்பனியின் முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## நொச்சிமோட்டை நேர்ப்பாதையில் பயணம் செய்ய அனுமதி

யாழ்-வவுனியா வீதியில் நொச்சிமோட்டை வழியான பகுதி மீண்டும் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வருட காலமாக இப்பகுதி வழியாகப் பயணம் செய்ய இராணுவத்தினர் பொதுமக்களை அனுமதிக்கவில்லை. சாந்தசோலை சுற்று வயல் வழிப்பாதையினூடாகவே யாழ்கொழும்பு பயணிகள் அனுமதிக்கப்பட்டு வந்தனர்.

இதேவேளை வவுனியா ஊரடங்குச் சட்டம் காரணமாககொழும்பிற்கானபயணத்தைத் தொடர முடியாமல் புளியங்குளத்தில் தங்கியிருந்த யாழ்ப்பயணிகள் நொச்சிமோட்டை - தாண்டிக்குளம்-வவுனியா வழியாகப் பயணம் செய்ய நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டனர்.

## 163 நாடுகளில் உள்ள 5 லட்சம் சிறுவர்களுக்கு 'எயிட்ஸ்'

உலகெங்கும் சுமார் 5 லட்சம் சிறுவர்களுக்கு எயிட்ஸ் நோய் உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் அண்மையில் மேற்கொண்ட ஆய்வொன்று தெரிவிக்கின்றது.

கடந்த அக்டோபர் மாதம் முதலாம் திகதிவரை 163 நாடுகளில் மொத்தம் நான்கு லட்சத்து 18 ஆயிரத்து 403 சிறுவர்கள் எயிட்ஸ் நோய்த் தொற்றுக்கு ஆளாகியுள்ளமை இந்த மதிப்பீட்டின் மூலம் அறியப்பட்டுள்ளது

கடந்த ஜூலை முதலாம் திகதிக்குப் பின்னர் மட்டும் 46, 600 சிறுவர்கள் எயிட்ஸ நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

நாதஸ்வரமேதை என். கே. பத்மநாதன் அவர்களின் மணிவிழாத் தொகுப்பு - தொடர்: 3

## நாதயோகிக்கு நல்லையில் பெருவிழா!

அடுத்து அறிஞர் வாழ்த்து இடம்பெற்றது. யாழ்பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி இ.பாலசுந்தரம் அவர்கள் தமது வாழ்த்துரையில் ஒரு கலைஞனுக்கு இத்தகைய மாபெரும் மணிவிழாவெடுக்கும் விழாக்குழுவே முதலில் பாராட்டப்பட வேண்டியது என்றார்.

கலைகள்பல. அவற்றுள் தெய்வீகக்கலையாகக் கோவில்களில் சிறப்பிடம் பெறுவது நாதஸ்வரம். இக்கலைஞர்களை இசைவேளாளர்கள் எனப்பாராட்டுவர். இசை வேளாளர்கள் மாவிட்டபுரம், அளவெட்டி, இணுவில், கோண்டாவில், வண்ணார்பண்ணை, நல்லூர், சாவகச்சேரி போன்ற இடங்களில் பரம்பரையாக வாழ்ந்து வந்துள்ளனர். அவர்களது பாரம்பரியம் ஆராயப்படவேண்டும்.

திரு.த.சண்முகசுந்தரம் ஓரளவு ஆராய்ந்துள்ளார். அது மேலும் விரிவாக ஆராயப்பட வேண்டும், நூல்வடிவில் வெளிவருதல் வேண்டும்.

வெளிநாடுகளிலும் திரு. பத்மநாதன் புகழ் ஓங்கியது. தலைசிறந்த தவில் கலைஞர்கள் அவருடைய கச்சேரியில் தவில் வாசித்துள்ளனர். பல்வேறு விருதுப் பெயர்களை அவர் பெற்றுள்ளார். இசைக் கலை பற்றியாராய்ந்து யாழ் நூலை ஆக்கிய விபுலாநந்தர் நூற்றாண்டில் இப் பாராட்டுவிழா நடைபெறுவது மிகப் பொருத்தமானதே என்று கூறி வாழ்த்தினார்.

நாதஸ்வர மேதை பஞ்சாபிகேசன், பத்மநாதன் அவர்களை வாழ்த்தினார். இப்பாராட்டு விழா இக் கலைக்குத் தொண்டாற்றிவரும் எங்கள் எல்லோரையுமே பாராட்டுவது போன்ற மகிழ்ச்சியை எங்களுக்கு அளிக்கின்றது என்றார்.

கவிஞர் சோ. பத்மநாதன் அவர்கள் யார் இந்த N. K. பத்மநாதன் என வினவி முதலில் அற்புதன் என்றார். பின் தொடர்ந்து பிறவிக் கலைஞன் எங்களுக்கு வாய்த்த முதுசொம் மேதை, தனது முத்திரையை எங்கும் பதித்தவன், தனிநாயக அடிகளைத் தமிழ்த் தூதர் என்பது போல, ஒரு கலைத்தூதன் என்று அடுக்கிக் கொண்டே சென்றார். வித்தியா கர்வம் பிடித்தவன் என்றுகூறி லண்டன் ஒலிபரப்பில் தேசிய ஆடையிலேயே தோன்றுவோம், உங்களுக்காக மேலைத்தேய ஆடையில் தோன்றமுடியாது எனக்கூறி அவர்களைப் பணிய வைத்த நிகழ்ச்சியையும் எடுத்துக்கூறினார்.

வெளிநாடுகளில் அளிக்கவிருந்த வாய்ப்புக்களை உதறிவிட்டு நல்லூர் முருகன் திருவிழாவில் வாசிக்க வந்த அவருடைய பக்தியையும் பண்பாட்டையும் புலப்படுத்தினார். அறுபதுக்கு மேற்பட்ட கலைஞர்கள் இணைந்து மணிவிழாவில் ஒழுங்குற அளித்த வாத்தியகான சிறப்பையும் விதந்துரைத்தார் நல்லூர் முருகன் திருவிழாவில் முருகன் மயில்வாகனத்தை விட்டுவிட்டுப் பத்மநாதனின் நாதவாகனத்தில் ஏறிவருவது போன்ற ஒரு பிரமையை அவரது வாசிப்பு ஏற்படுத்துகின்றது எனத் தமது பாராட்டுக்கு மகுடமும் சூட்டினார்

சுவைஞராக வந்த நவாலியூர் க. சச்சிதானந்தன் அவர்கள், அனுபவித்த இன்பத்தை எடுத்துரைக்க முடியுமா எனக் கேட்டுத் திருவாவடுதுறை இராசரத்தினம் பிள்ளை அவர்கள் ஆறுமுகம்பிள்ளையிடம் ஆசிபெற்ற வரலாற்றிலே தொடங்கி எழுபது வயதைத்தாண்டிய தியாகராச சுவாமிகள் தமது வீட்டு வாசலிலே உருப்படி வாசித்த தாசரியைக் கட்டித்தழுவியது போன்ற பல இசை மேதைகளின் வரலாறுகளை எடுத்துரைத்துச் சபைக்குக் கலகலப்பூட்டினார். சங்கீதம் ஒரு பொழுது போக்கு என்று கூறுவோரைச் சாடினார்,

கடந்த பதினைந்தாண்டு காலத்தில் ஈழத்தில் இசைபயில்வோரின் தொகை அதிகரித்திருப்பதையும், இசைக்கு மதிப்பும், முக்கியத்துவமும் அளிக்கப்பட்டு வருவதையும் குறிப்பிட்டு நல்ல எதிர்காலத்துக்கு இதுவே அறிகுறிகள் எனப் பாராட்டினார்.

டாக்டர் கெங்காதரன் அவர்கள் அளித்த வேணுகானமும், இசைஞான திலகம் இராதாகிருஷ்ணன் அவர்கள் அளித்தவயலின் சோலோ நிகழ்ச்சியும் இசைக்கலைஞர் பத்மலிங்கம் அவர்கள் பொழிந்த இசையமுதும் இறுதி நிகழ்ச்சியாக அமைந்து கலாரசிகர்களுக்குப் பெருவிருந்தாயின.

(வளரும்)

# பங்கீடு; சீனி வழங்கலில் தற்போது மாற்றமில்லை

தற்போது நடைமுறையில் உள்ள உணவுப் பங்கீட்டுத் திட்டத்திற்கு ஏற்பவே சீனி வழங்கப்படும் எனவும் தற்போது இதில் எவ்வித மாற்றமும் செய்யப்பட மாட்டாது எனவும் அறிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நாள்களில்இங்கு வந்து சேரும் கப்பல்களில் வரும் சீனியைப் பொறுத்தே இதில் மாற்றங்கள் ஏற்படுத்த முடியும் எனவும் செயலக வட்டாரங்கள் கூறின. 04

# க.பொ.த. மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சை

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த சாதாரணதர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதி முன்னோடிப் பரீட்சையொன்றை நடாத்த யாழ் கல்வித்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இப்பரீட்சை அடுத்த மாதம் முதல் வாரத்தில் நடைபெறும் என்றும், சகல க.பொ.த. சாதாரணதர மாணவர்களும் இதில் தோற்றித் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளுமாறும் கல்விப் பணிப்பாளர் மாணவர்களைக் கேட்டுள்ளார். 04

# அடையாள அட்டை புதுப்பிக்க படிவங்கள் போதாது

யாழ் மாவட்டத்தில்இருந்து 1972ஆம் 1973ஆம் ஆண்டுகளில் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றவர்கள் அவற்றைப் புதுப்பிக்க விண்ணப்ப படிவங்கள் போதாது என்று தெரிவிக்கப்படுகிறது.

கிராம சேவையாளர்களுக்கு ஆட்பதிவுத்திணைக்களம் இவ் விண்ணப்பப் படிவங்களை போதியளவு அனுப்பி வைக்காமையே இதற்கு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நாடு முழுவதிலுமிருந்து 1972ஆம், 1973ஆம் ஆண்டில் பெறப்பட்ட தேசிய அடையாள அட்டைகளை புதுப்பிக்க ஆட்பதிவுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது 18

# புஷ் - கொர்பி இன்று சந்திப்பு

சோவியத் யூனியன் ஜனாதிபதி திரு. மிக்கெய்ல் கொர்ப்பச்சேவ் சோவியத்தில் ஏற்பட்ட அதிரடிப் புரட்சியின் பின்னர் முதல் தடவையாக அமெரிக்க ஜனாதிபதி திரு ஜோர்ஜ் புஷ்சை மட்லிற் நகரில் இன்று சந்திக்கவுள்ளார். 07

## முல்லை...

வரை எமது நிருபர்கள் மூலம் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

பல இடங்களில் மரங்கள் வேருடன் சரிந்துள்ளன, மதகுகள் உடைத்து வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்கின்றது, நூற்றுக்கணக்கில் மக்கள் வீடுகளை இழந்து அல்லலுறும் வேதனைநிலை தோன்றியுள்ளது. ஏற்கனவே சிதைந்துள்ள நிலையில் உள்ள கட்டிடங்களும்கூட தகர்ந்து வீழும் அபாயம் காணப்படுகின்றது சில இடங்களில் சிறு விதிவிபத்துக்களும் நிகழ்ந்துள்ளன

தமிழகக் கரையோரப் பகுதிகளிலும் காலநிலை சீராக இல்லை என்றும், கடும்மழை அபாயம் உருவாகியுள்ளதாகவும் சென்னை வானொலிச் செய்தி நேற்றுமாலை அறிவித்தது. (மழை நிலை தொடர்பான முதலில் வந்த செய்தி பக்கம் இரண்டில்)

# அயோத்தியில் மீண்டும் கலவரம் மூளும் சூழ்நிலை

வட இந்தியாவின் அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவது தொடர்பான விவகாரம் நீறுபூத்த நிலையிலிருந்து இப்போது கன்று பெரும் சூடு பிடித்துள்ளதாக நேற்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

உத்தரப்பிரதேசத்தில் அயோத்திநகரில் உள்ள முஸ்லிம் மசூதியை இடித்து ராமர் கோயில் கட்டும் முயற்சியை விஸ்வ ஹிந்து பரிஷித் இயக்கம் கைவிடக் கோரியும் அதன் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் முன்னாள் பிரதமரும் ஜனதாதள் கட்சித் தலைவருமான திரு. வி. பி. சிங் இன்று ஆர்ப்பாட்ட நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

விஸ்வ ஹிந்துப் பரிஷித் இயக்கத் தொண்டர்கள் திரு சிங்கின் இவ்வார்ப்பாட்டத்தைத் தடுக்கப் போவதாகக் கூறியுள்ளனர்.

அயோத்தி நகரில் இதனால் இருபகுதித் தொண்டர்களுக்கும் இடையே கலவரம் மூண்டுவிடக்கூடாது என்பதற்காக காவல் தீவிரப்படுத்தப்பட்டு ஆயிரக்கணக்கில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

அயோத்தியில் முஸ்லிம் மசூதி உள்ள இடத்தில் ராமர் கோயில் கட்டுவதில் தமது கட்சி உறுதியாக இருப்பதாக பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி நேற்றுக் கூறினார்.

## புலிகளின்...

செய்தி முகவர் திரு. கிறிஸ்தோபர் மொறிஸ் தெரிவித்துள்ளார்.

இராணுவ நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் வாழ்வு துன்பப் போராட்டமாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இது இவ்வாறு இருக்க கிழக்கில் படையினர் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதாக லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க கூறியுள்ளதாக ஏஜென்ஸிச் செய்திகள் நேற்றிரவு தெரிவித்தன. விமானப்படையும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாம்.

★ வர்த்தகர்களுக்கு உணர்வு பூர்வ விளக்கம்

# பசியின் கொடுமை தவிர்க்கவே புதிய நடைமுறை அமுலாகின்றது

''அரசு நீண்டகாலத்திற்கு எமக்கு உணவுப்பொருள்களை அனுப்பாது விடலாம். இங்கே இருக்கின்ற உணவுப் பொருள்களை தமிழ் மக்கள் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகள் போல பகிர்ந்து உண்ணவேண்டும். மக்களின் விடிவுக்காகப் போராடப் புறப்பட்ட நாம் அவர்கள் பட்டினியால் சாக நேருவதை அனுமதிக்க முடியாது. எம்மிடமுள்ள உணவையும் கூட பசியால் வாடும் மக்களுக்குக் கொடுக்கவும் நாம் தயங்க மாட்டோம்''

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. பரா யாழ் மாவட்ட வர்த்தகர்களுக்காக யாழ் இந்துக்கல்லூரியில் உள்ள குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் ''அரசு எந்தத்தடையை விதித்தாலும் மக்களுக்கு ஒழுங்கான முறையில் சமமாக எல்லோருக்கும் உணவுப் பொருள் கிடைக்கக் கூடிய வகையில் செய்யவே சில உணவுப் பொருள்களை அத்தியாவசியப் பொருள்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன,

இன்று கட்டுப்பாட்டு விலையில் சகல கஷ்டப்பட்ட மக்களும் ஓரளவு உணவுப் பொருள்களை பெறக்கூடிய வகையில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன தனியார் வர்த்தகர்களாகிய உங்களிடம் இப்பொருள்களை விற்க வேண்டாம் 'என நாம் கூறியது உங்கள் பொருளகளைப் பறிமுதல் செய்வதற்காக அல்ல பதுக்கலைக் கட்டுப்படுத்துவதற்கும், வேலையற்று அன்றாடம் வாடும் மக்கள் இயன்றளவு உணவுப் பொருள்களைப் பெறக் கூடிய தற்குமேயாகும்.''

இக்கலந்துரையாடலில் தமிழீழ மணமீட்புநிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி மக்களுறவு கொள்கை முன்னெடுப்பு முக்கியஸ்தர்களில் ஒருவரான இளம்பரிதி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## செயலகத்தில் இன்று கூட்டம்

அத்தியாவசிய உணவுப் பொருள் விநியோகம் தொடர்பாக சகல பல நோ. கூ. சங்கப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய கூட்டம் ஒன்று இன்று முற்பகல்பத்துமணிக்கு யாழ் செயலகத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

## கப்பலில்...

கான தபால் பொதிகள் இன்று காலை யாழ் பிரதம தபாற்கந்தோரில் இருந்து பருத்தித்துறைக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளன, 07

## அன்னமலையில்...

இராணுவத்தினர் கைவிடப்பட்ட அன்னமலை முகாமை பார்வையிட வந்த போது கிளைமோர் வெடித்தது என்றும் இரண்டு சிப்பாய்கள் காயமடைந்தனர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

## உணவுப்...

இதனால் தற்போதைய சூழ்நிலையில் கையிருப்பில் உள்ள உணவுப் பொருள்களைக் கட்டுப்பாடான முறையில் பகிர்ந்து விநியோகிப்பது அவசியமாக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காகப் பிரதேச ரீதியான பாவனையாளர் பாதுகாப்புக்குழுக்களும் கிராம ரீதியான பாவனையாளர் பாதுகாப்புக்குழுக்களும் உருவாக்கப்பட்டு அவ்வப் பிரதேசங்களில் உணவு விநியோகம் யாவருக்கும் சீராக நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இச் சூழ்நிலையில் பொது மக்களுக்கும் வர்த்தகர்களுக்கும் ஏற்படும் சில அசௌகரியங்களைக் கவனத்தில் கொள்ளாது யாழ் மாவட்ட மக்களின் நன்மைக்காக. இத்திட்டத்திற்கு பூரண ஒத்துழைப்புத் தருமாறு அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

ஆனையிறவு ஊடாக உணவு லொறிகள் வருவதில் நடைமுறைச்சிக்கல்கள் இருப்பதால் தற்பொழுது தரை மார்க்கமாக உணவு லொறிகள் வரமாட்டாதெனவும் தெரிவிக்கப்படுகிறது. (06)

## ஆரையம்பதி...

என்று அறிவிக்கப்படுகின்றது

இதேவேளை ஆரையம்பதி முகாமிலிருந்து மண்முனைக்கு வருகையில் படையினர் அப்பகுதியில் உள்ள காட்டை நோக்கிச் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர் என்றும் விமானத் தாக்குதலும் இடம்பெற்றது என்றும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது

## வீதித்தடங்கல்

தற்போது பெய்துவரும் கடும் மழையினால் யாழ் ஆஸ்பத்திரிக்கு முன்பாக நின்ற பாரிய மலைவேம்பு மரம் நேற்று இரவு வேரோடு பெயர்ந்து ஆஸ்பத்திரி சிறுவர் வாட்டுக்கு முன்பாக உள்ள மதில்மேல் சாய்ந்துள்ளது

தெய்வாதீனமாக எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை

இதனால் ஆஸ்பத்திரி வீதியில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது, 07

## புலிகள்...

செய்து முடித்துள்ளனர் என்றும் குறிப்பிடப்படுகிறது.

குடமுனை, உன்னிச்சை இராணுவ முகாமிலிருந்து வெலிகந்தை முகாம் நோக்கிப் படையினர் சென்றுகொண்டிருக்கையில் மகளிர் பிரிவினர் தாக்குதல் நடத்தியதில் பதினான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதும் மூன்று இராணுவத்தினர் காயமுற்றதும் குறிப்பிடத்தக்கது

ஐந்து இராணுவத்தினரை காணவில்லை என்றும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் கூறியதாக ஏஜென்ஸிச் செய்திகள் கூறியதும் தெரிந்ததே.

இத்தாக்குதலில் பெண் போராளியான 2ஆம் லெப் நிலா (கி. நிர்மலாதேவி) என்பவர் வீரமரணமடைந்தார். இதன்போது படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் விவரம்:

- ★ ஏ. கே. எல். எம். ஜி - 02
- ★ ரம் மகஸின் - 02
- ★ லிங்குடன் - 550
- ★ ரி - 56 II - 04
- ★ ரவை கூடுகள் - 18
- ★ ரி - 81 - 07
- ★ ரவை கூடுகள் - 28
- ★ ரி - 56 - 01
- ★ 7. 62 ஐ. எம். ரவைகள் - 1333
- ★ 60 எம். எம். ஷெல் - 12
- ★ ஜே ஆர் கைக்குண்டு - 03
- ★ இராணுவப் பை - 03
- ★ தலைக்கவசம் - 04
- ★ ஏ. கே ரவை கூடுகள் - 12
- ★ வானொலி தொடர்பு சாதன மின்கலம் - 01

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ளஅச்சகத்தில் 29 10-91 ல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.